# மதுரைக்கான ஆறு புதிய அறிவிப்புகள்!

மதுரைக்கான ஆறு புதிய அறிவிப்புகளை இங்கே அறிவிக்க நான் விரும்புகிறேன்...

**முதலாவது அறிவிப்பு –**

மதுரை மாநகரில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பல காலமாக எதிர்பார்க்கப்பட்ட வைகை ஆற்றின் வடகரையில், விரகனூர் சுற்றுச்சாலை முதல் சக்குடி வரை 8.4 கிலோ மீட்டர் நீளத்துக்கு 130 கோடி ரூபாய் செலவில் புதிய சாலை அமைக்கப்படும்.

**இரண்டாவது அறிவிப்பு -**

மதுரை மாநகரின் முக்கிய பகுதிகளான, மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி இருக்கின்ற நான்கு மாசி வீதிகள், வெளி வீதிகள், புதூர், அண்ணா நகர், சந்தைப்பேட்டை, தெற்குவாசல், எஸ்.எஸ்.காலனி, ஆரப்பாளையம், அரசரடி, பழங்காநத்தம், பைக்காரா உள்ளிட்ட பகுதிகளில், இப்போது இருக்கின்ற பழைய பாதாளசாக்கடைக் குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

**மூன்றாவது அறிவிப்பு -**

மதுரை கிழக்கு வட்டத்தில் இருக்கின்ற உத்தங்குடி உபரி நீர்க் கால்வாயில், 7 கோடி ரூபாய் செலவில், தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**நான்காவது அறிவிப்பு**

மேலூர் வட்டத்தில் இருக்கின்ற, கேசம்பட்டி கிராமம் பெரிய அருவி நீர்த் தேக்கம் மற்றும் அதைச் சார்ந்த கண்மாய்கள் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். மேலும், மேலூர் வட்டம், சூரப்பட்டி அருகே பாலாற்றின் குறுக்கே 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டப்படும்.

**ஐந்தாவது அறிவிப்பு -**

மதுரை மேற்கு வட்டத்தில் இருக்கின்ற கொடிமங்கலம், மேலமாத்தூர், புதுக்குளம் மற்றும் விளாச்சேரி கிராமங்களில் இருக்கின்ற பல்வேறு ஏரிகள் மற்றும் கால்வாய்கள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**ஆறாவது அறிவிப்பு -**

வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் ஒன்றியத்தில், சாத்தையாறு அணை முதல் வைகாசிப்பட்டி வரை இருக்கக்கூடிய சாலை, குடுவார்பட்டி முதல் சல்வார்பட்டி வரை இருக்கக்கூடிய சாலை மற்றும் பாலமேடு முதல் வேம்பரலை வரை இருக்கக்கூடிய சாலை ஆகியவை 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வனத்துறையின் அனுமதி பெற்று அவைகள் மேம்படுத்தப்படும்.

இந்த அறிவிப்புகளை எல்லாம் நான் வெறும் அறிவிப்புகளாக அறிவித்து விட்டுப் போகிறேன் என்று நினைக்காதீர்கள். இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**
**மதுரை அரசு விழா**

# மதுரை மாவட்ட மக்களுக்கு மட்டும் நான்கரை ஆண்டுகளில் - ரூ.6 ஆயிரம் கோடியில் நலத்திட்டங்கள்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி**

இந்த அறிவிப்புகளை எல்லாம் நான் வெறும் அறிவிப்புகளாக அறிவித்துவிட்டுப் போகிறேன் என்று நினைக்காதீர்கள். இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**சில கட்சிகளுக்கு கலவர சிந்தனைதான்!**

இப்படி, நம்முடைய சிந்தனை எல்லாம் தமிழ்நாட்டின் வளர்ச்சி; முன்னேற்றம்தான்! ஆனால், சில கட்சிகளுக்கு எப்போதுமே கலவர சிந்தனைதான். தேவையில்லாத பிரச்சினையை கிளப்பி, நம்முடைய வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

காலம் காலமாக கார்த்திகை தீபத்துக்கு, திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தீபம் ஏற்றுவது போல, கடந்த 3ஆம் தேதி மாலை 6 மணிக்கு, பால தீபம் ஏற்றப்பட்டது. அதன் பிறகு, அதேநேரத்தில், உச்சிப்பிள்ளையார் கோயில் தீப மண்டபத்திலும் தீபம் ஏற்றி, சாமி புறப்பாடாகி, பதினாறு கால் மண்டபத்திற்கு எதிரே இருக்கும் இடத்தில், சொக்கப்பான் ஏற்றி, சாமிக்கு ரக்ஷை சாத்தப்பட்டது. இவையெல்லாம், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் முறையாக நடைபெற்றது. இவைகள் எல்லாம் உள்ளூர் மக்களுக்கும், உண்மையான பக்தர்களுக்கும் இது நன்றாக தெரியும்! அவர்கள் நல்லபடியாக தரிசனம் செய்துவிட்டு தான் வீட்டிற்குச் சென்றார்கள். ஆனாலும், இப்போது என்ன காரணத்துக்காக பிரச்சினை நடைபெறுகிறது? இந்தப் பிரச்சினையைக் கிளப்புகின்ற கூட்டத்தின் நோக்கம் என்ன? இவையெல்லாமே மக்களுக்கு, நன்றாகவே தெரியும்.

**சமூகத்தை துண்டாடும் சதிச் செயல்களா ஆன்மீகம்!**

ஆன்மீகம் என்பது, மன அமைதியை, நிம்மதியை தந்து, மக்களை ஒற்றுமையாக இருக்க வைக்கவேண்டும். நான்கு பேருக்கு நன்மை செய்யவேண்டும்! இதுதான் உண்மையான ஆன்மீகமாக இருக்க முடியும்! ஒரு சிலருடைய அரசியல் இலாபங்களுக்காக பிரிவுகளையும், பிளவுகளையும் உண்டாக்கி, சமூகத்தை துண்டாடும் சதிச்செயல்கள் நிச்சயமாக ஆன்மீகம் இல்லை! அது அரசியல்! அதிலும் கேடுகெட்ட மலிவான அரசியல்!

தீபம், எங்கே ஏற்றப்பட வேண்டுமோ, எப்போது ஏற்றப்பட வேண்டுமோ, அங்கே வழக்கம்போல சரியாக, முறையாக ஏற்றப்பட்டிருக்கிறது! நான் இன்னும் பெருமையோடு பக்தப் பெருமக்களுக்கு சொல்கிறேன்.. தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்து ஆயிரத்து 490 நாளில், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி இருக்கிறோம்.

இப்போது அந்த எண்ணிக்கை இன்னும் கூடியிருக்கும். இப்படிப்பட்ட அரசை, ஆன்மீகத்துக்கு எதிரி என்று சொன்னால், அப்படி சொல்லக் கூடியவர்களுடைய உள்நோக்கம் என்ன என்று, உண்மையான பக்தர்களுக்கு தெளிவாக தெரியும். அறத்தைக் கொண்டாடும் அமைதியான மாநிலமாகத் தான் தமிழ்நாடு என்றைக்கும் இருக்கும்!

மதுரை மக்களிடம் வளர்ச்சி என்று சொன்னால், வாங்க! வாங்க! என்று வரவேற்பார்கள். அதுவே வன்முறையை தூண்ட கூப்பிட்டால், என்ன செய்வார்கள் தெரியுமா?

**கலவரக் கும்பலை விரட்டுவார்கள் மதுரை மக்கள்!**

மதுரை ஸ்லாங்கில் சொல்ல வேண்டும் என்றால், கலவரக் கும்பலை பொடனிலேயே அடிச்சு 'வெரட்டுவாய்ங்க!' அமைதியின் பக்கம் நிற்கின்ற, மதுரை மக்களுக்கு நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

நம்முடைய எதிரிகள், டெல்லியில் இருந்து நமக்கு எத்தனை இடைஞ்சல்கள் கொடுத்தாலும், நிதி நெருக்கடிகள் ஏற்படுத்தினாலும், ஆளுநர் மூலமாக, முட்டுக்கட்டைகள் போட்டாலும், எல்லாவற்றையும் மீறி, இந்தியாவிலேயே நம்பர்1ஆக வரலாறு காணாத பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது!

எங்களுடைய வளர்ச்சிப் பயணத்தை, உங்களால்தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் சதித்திட்டங்கள் எல்லாம் நீங்கள் செய்கிறீர்கள்! நீங்கள் எப்படி பந்து வீசினாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் அது அடிப்பது சிக்சர்தான்! அந்த டீமுக்கு ஏற்றார்போல அடிமைகள் சிக்கலாம். பழைய அடிமைகள், புது அடிமைகளை வைத்து, 'பி' டீம், 'சி' டீம் உருவாகலாம். ஆனால், கடைசியில் டோர்னமெண்ட்டில் சாம்பியன் நாங்கள் தான்!

வருகின்ற 15ஆம் தேதியில் இருந்து, ஏற்கனவே, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயனடைகின்ற ஒரு கோடியே 14 இலட்சம் மகளிரோடு சேர்த்து, விடுபட்ட தகுதியான மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப் போகிறோம்!

**திராவிட மாடல் 2.0 உங்கள் ஆதாரவுடன் தொடரும்!**

கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம் நான் முதல்வன் புதுமைப்பெண் - தமிழ்ப்புதல்வன் என்று எண்ணற்ற திட்டங்களால், தமிழ்நாட்டை உயர்த்தும் எங்களின் சாதனை பயணம் திராவிட மாடல் 2.0 விலும் உங்களின் ஆதரவுடன் தொடரும்... மக்களுக்கான நன்மைகள் பெருகும்... இங்கே திரண்டிருக்கின்ற, மதுரை மக்கள் மீதான நம்பிக்கையில் சொல்கின்றேன். அனைத்து மதத்தினரும், அங்காளி, பங்காளியாக பழகுகின்ற, பாசக்கார மதுரை மண்ணிலிருந்து உறுதியாக சொல்கின்றேன். எங்கள் தமிழ்நாட்டில், என்றைக்கும் பெரியார் ஏற்றிய, சமத்துவ தீபம்தான் ஒளிரும்! உங்களால் அதை தடுக்க முடியாது! "எதிர்த்துக் கேட்க ஆள் இருக்கிறது! உள்ளே பெரியார் ஏற்றிய நெருப்பிருக்கிறது!"

2026லும் அதே ஃபயருடன், திராவிட மாடல் அரசுதான் தொடரும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி...**

வழித்தடச் சாலைகள், மூன்று சாலை சந்திப்புகள் மேம்பாடு, சந்திப்புகளில் சிக்னல் இல்லா பயணம், தடையில்லா இடது புறம் திரும்புதல் (Free Left), பேருந்து நிறுத்தத்திற்கு தனி இடவசதி உள்ளிட்ட பல்வேறு வசதி களுடன் இச்சாலை சந்திப்பு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது.

இம்மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்படும் என்று நேற்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதன்படி, வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இதன் மூலம், சிவகங்கை சாலையில் கோரிப்பாளையம் முதல் சுற்றுச் சாலை வரை போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பயண நேரமும் 15 நிமிடத்திலிருந்து 5 நிமிடமாக குறையும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு.பூமிநாதன், கோ.தளபதி, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜெ. பிரவீன்குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே. செல்வம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 7.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




மனிதவள மேலாண்மைத்துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழிசெல்வராஜ் தலைமையில் 07.12.2025 அன்று புனித ஜார்ஜ்கோட்டை வளாகத்தில் உள்ள PALM GROVE SAINIK INSTITUTEல் படைவீரர் கொடி நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, அரசு துணைச் செயலாளர், பொது (முன்னாள் படைவீரர்)த்துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறையின் இயக்குநர் கே.பாலசுப்பிரமணியம், அரசு பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தாக்கர், தென் பிராந்திய இராணுவ தளபதி MAJOR GENERAL RM SRINIVAS, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் ம.எட்வர்ட் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதன்முறையாக பழங்குடியின கிராமத்திற்கு பேருந்து!

## அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

உதகை, டிச.9–

சுதந்திரத்திற்கு பிறகு முதன்முறையாக தமிழ்நாட்டின் கடைக்கோடி எல்லையில் அமைந்துள்ள பழங்குடியினர் கிராமத்திற்கு அரசு பேருந்து இயக்கப்பட்டு உள்ளது.

இதனை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களை ஒன்றிணைக்கும் மாவட்டமாக நீலகிரி மாவட்டம் அமைந்துள்ளது. மலை மற்றும் வனப் பிரதேசம் என்பதால் பழங்குடி மக்கள் அதிகம் வசித்து வருகின்றனர். சமவெளிப் பகுதிகளில் கால மாற்றத்தில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடை பெற்று வந்தாலும், மலைப் பகுதியான இங்கு தற்போது வரை பல பழங்குடியின கிராமத்திற்கு மின்சாரம், சாலை மற்றும் பேருந்து சேவைகள் முழுமையாக தொடங்க முடியவில்லை. ஆனாலும் கடந்த சில ஆண்டுகளாக சாலை வசதிகள் அமைத்துத் தந்து புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகள் தொடங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் தமிழ்நாட்டின் கடைக்கோடி எல்லையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டம் ஊட்டியில் இருந்து சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் அடர்ந்த வனப் பகுதியில் அமைந்துள்ள குள்ளங்கரை இருளர் பழங்குடியினர்கிராமத்திற்கு சாலை வசதி பேருந்து சேவை இல்லை. இதனால் பள்ளி மாணவ மாணவிகள், அவசர மருத்துவ வசதிக்கு செல்லக்கூடிய மக்கள் புலி, யானை, கரடி மற்றும் போன்ற வனவிலங்குகள் அச்சுறுத்தல் உள்ள வளப்பகுதியில் சுமார் மூன்று கிலோ மீட்டர் நடந்து செல்வதாக கூறி வந்தனர். மேலும் இது குறித்து பலமுறை நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

இந்தநிலையில் குள்ளங்கரை இருளர் பழங்குடியினர் கிராமத்திற்கு 2006 வன உரிமைச் சட்டத்தின் படி சாலை அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை அரசு பேருந்து சேவையை நாடு சுதந்திரம் பெற்ற பிறகு முதல் முறையாக தொடங்கப்பட்டது. தமிழக அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர் கே.எம் ராஜு ஆகியோர் இரவு பழங்குடியின கிராமத்திற்கு வந்த அரசு பேருந்து சேவையை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். முதன்முறையாக இரவு 7 மணிக்கு வருகை தந்த அரசு பேருந்தை பார்ப்பதற்காக மாலை 4 மணி முதலே பழங்குடியின பெண்கள் தங்களது குழந்தைகளுடன் காத்திருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் அ. இராசசேகரன்
### டிசம்பர் 9 (2012)



**மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**"இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**